**தலைப்பு 298 – அளவுக்கூறுகள், கட்டளைகள் மற்றும் சேவைகள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 298 - அளவுக்கூறுகள், கட்டளைகள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 ஒக்தோபர் 19 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த ஏற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 316.44 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 315.36 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த தேறிய நிதி ஏற்பாடுகளில் ரூபா 1.08 மில்லியன் அதாவது 0.34 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 95.94 | 95.00 | 0.94 | 0.98 |
| மூலதனம் | 220.50 | 220.36 | 0.14 | 0.06 |
| மொத்தம் | **316.44** | **315.36** | **1.08** | **0.34** |

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 29801 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 7.97 | 2.65 | 3.50 | 4.46 | 30.00 | 16.62 |

## 2.3 பொது வைப்புக் கணக்கு

திணைக்களத்தின் கீழான 6000/0000/00/0006/0069/000 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 45.02 மில்லியனாக இருந்தது.

## 2.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

அளவுக்கூறுகள், கட்டளைகள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

திணைக்களத்தினால் கீழே காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை. |
| (ஆ) | கணனி, துணைக் கருவிகள் மற்றும் மென் பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை |
| (இ) | இழப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 |
| (ஈ) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 |
| (உ) | கேள்வி கோரல் பதிவேடு | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.2.1 வழிகாட்டல் |

### 3.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

29801 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,316,281 ஆக காணப்பட்டதுடன், அந்நிலுவை மீதிகள் 1 ஆண்டு முதல் 5 ஆண்டுகள் வரையான காலப்பகுதியிலிருந்து நிலவி வந்தபோதிலும், அந் நிலுவை மீதிகளை அறவிடுவது தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டன.

### 3.3 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

#### 3.3.1 வருடாந்த பெறுகைத் திட்டம்

அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கையெடுத்து பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு வருடாந்த பாதீட்டின் மூலம் ரூபா 316.2 மில்லியன் நிதிஏற்பாடும் குறை நிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 0.2 மில்லியன் நிதிஏற்பாடும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தன. அந்த நிதிஏற்பாட்டினைப் பயன்படுத்துவதற்காக 2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2015 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டங்கள் கூட்டப்பட்டிருக்கவில்லை.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ் அறிக்கை 2016 மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களம் 2016 ஒக்தோபர் 17 ஆந் திகதி வரையிலும் அவ்வறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடனான இணக்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| **(அ) சட்டரீதியான ஏற்பாடுகள்** | | |
| (i) 1995 இன் 35 ஆம் இலக்க அளவீட்டு அலகு நியமங்கள் மற்றும் சேவைகள் அதிகாரச்சட்டம் | | |
| • (2) 35 ஆம் பிரிவு | 133,996,977 | 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் நிதியத்தின் வருமானத்திலிருந்து அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய முறையே ரூபா 8.83 மில்லியன் ரூபா 54.28 மில்லியன் மற்றும் ரூபா 70.88 என 134.00 தொகையான 1/3 பகுதி அரச |

| | | |
|---|---|---|
| | | வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. அவ் வருமானம் முறையான அங்கீகாரமொன்று இல்லாமல் கட்டிட நிர்மாணத்திற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. |
| • 20(1)(அ) மற்றும் 37 ஆம் பிரிவு | | வியாபாரத்தில் பயன்படுத்தப் படுகின்ற அனைத்து அளவை உபகரணங்களையும் வருடாந்தம் மெய்மையாய்வு செய்ய வேண்டிய போதிலும் அவ்வாறு அனைத்து உபகரணங்களும் மெய்மையாய்வு செய்யப்பட்டமையினை உறுதிப் படுத்திக் கொள்வதற்கு உரிய நடைமுறையொன்று நிதியத்தினுள் தாபிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரை வரி அதிகாரச்சட்டம் மற்றும் 2008 சனவரி 01 ஆந் திகதிய 1530/13 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரம் | | ரூபா 25,000 இற்கு மேற்பட்ட கொடுப்பனவுகளுக்காக ரூபா 25 ஆன முத்திரை வரியினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை**<br>-------------------------------------------------- | | |
| நிதிப் பிரமாணம் 1646 | - | 2015 ஆம் ஆண்டிற்குரிய திணைக்களத்திற்குச் சொந்தமான குழாம் வாகனங்களின் நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்தப் பொழிப்புக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. |
| **(இ) பொது நிர்வாக சுற்றறிக்கை**<br>-------------------------------------------- | | |
| 1997 பெப்ரவரி 03 ஆந் திகதிய 06/97 ஆம் இலக்க சுற்றறிக்கை | | 2009 மே 05 ஆந் திகதி முன்னாள் பணிப்பாளர் ஓய்வுபெற்றதன் பின்னர் அத்திகதியிலிருந்து 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் அவ் |

| | | |
|---|---|---|
| | | வெற்றிடத்தை நிரப்பாமல் பதில் கடமை அடிப்படையில் ஓர் உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டு உத்தியோகபூர்வ கடமை மேவுகை செய்யப்பட்டிருந்தது. |
| **(ஈ)** | **அரச நிதிச் சுற்றறிக்கை சுற்றறிக்கை**<br>---------------------------------------------<br>2006 திசெம்பர் 22 ஆம் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 2.1 (அ) | நிதியத்தின் வருடாந்த பாதீடு 2014 செப்தெம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் தேசிய பாதீட்டுப் பணிப்பாளர் நாயகம் மற்றும் நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3.6 முகாமைத்துவ நலிவுகள்

திறைசேரி உண்டியல் காலாவதியாவதற்கு முன்னர் 2015 ஆம் ஆண்டின் போது கழிவிடப்பட்டு பணம் பெற்றுக்கொண்டமையால் நிதியத்திற்கு இழக்கப்பட்ட வட்டி ரூபா 5,223,010 ஆக இருந்தது.

## 3.7 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 16 | 11 | 5 |
| (ii) | மூன்றாம் நிலை | 30 | 01 | 29 |
| (iii) | இரண்டாம் நிலை | 198 | 133 | 65 |
| (iv) | ஆரம்ப நிலை | 97 | 70 | 27 |
| | மொத்தம் | 341 | 215 | 126 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இரண்டாம் நிலை பதவியின் கீழ் எடுக்கப்படும் எம்.எஸ்.டீ பரிசோதகர் பயிற்சி பதவி மற்றும் ஆய்வுகூட உதவிப் பயிலுனர் பதவிக்காக முறையே 20 மற்றும் 03 ஊழியர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். அந்த 23 பதவிகளுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.